மையங்களை சரி செய்ததற்குப் பிறகு கூடுதலாக ஏதாவது மையங்கள் ஆரம்பிக்கின்ற சூழ்நிலை வருகின்றபோது மாண்புமிகு உறுப்பினர்களுடைய கோரிக்கையை இந்த அரசு பரிசிலனை செய்யும்.

திரு. ரா. கு. பெருமாள்: தலைவர் அவர்களே, புதூர் 12 மைல் என்பதை ஒத்துக் கொள்கிறேன். ஆனால் என்னுடைய தொகுதி 70 மைல் நீளமும் 30 மைல் அகலமும் கொண்ட ஒரு தொகுதி. 300-க்கும் மேற்பட்ட கிராமங்கள் இருக்கின்றன. ஏற்கெனவே நெல்லை மாவட்டம் பிற்படுத்தப்பட்ட பகுதியாக அரசு பூர்வமாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. இருந்தபோதிலும் இந்த சலுகையை வைத்து, விவசாயிகளுக்கு இலாப நோக்கம் பார்க்காமல் உடனடியாக இந்த ஆண்டே ஏற்பாடு செய்து நிதி ஒதுக்க ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: இது 12 மைல் அல்ல. 12 கிலோ மீட்டர் தான். ரொம்பவும் அருகாமையில் இருக்கின்றது. இருக்கிற சேவைகளைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். தேவைகள் அதிகமாக இருந்தால் ஆரம்பிப்பது பற்றி அரசு யோசிக்கும்.

தென்னாற்காடு மாவட்டக் கூட்டுறவு நூற்பாலை.

*வினா எண் 78—திரு. கே. எம். தங்கமணி கவுண்டர்: மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தென்னாற்காடு மாவட்டக் கூட்டுறவு நூற்பாலை விஸ்தரிப்பு பணி நடைபெறுகிறதா?

(ஆ) ஆம் எனில் அத் திட்டம் எப்போது முடிந்து உற்பத்தியை துவங்கும்?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: (அ) ஆம்,

(ஆ) இப்பணி இவ்வாண்டுக்குள் முடிக்கப்பட்டு உற்பத்தி தொடங்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. கே. எம். தங்கமணி கவுண்டர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விஸ்தரிப்புத் திட்டம் மாநில அரசு நிதியில் கட்டப்படுகிறதா அல்லது மத்திய அரசு நிதி உதவியுடன் கட்டப்படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டததிற்கான மதிப்பு ஏறக்குறைய 150 லட்சம் ரூபாய். இதிலே விவசாய கூட்டுறவு அபிவிருத்திக் கழகம் மூலதனக் கடனாக 51.45 லட்சம் அனுமதித்திருக்கிறது. 51.45 லட்சம் மாநில அரசால் முதலீடு செய்யப்படுகிறது. மேலும் 90 இலட்சம் ரூபாய் தொழில் நிதி உதவிக் கழகத்திற்கு கடனாகப் பெற கோரிக்கை விடப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையிலே இந்த 13,760 கதிர்களைக் கொண்டு இயங்குகிற இந்தக் கூட்டுறவு நூற்பாலை 25.000 ஸ்பின்டில்கள்—கதிர்கள் கொள்ளளவாக மாற்றுவதற்கான விரிவாக்க வேலைகள் நடந்து வருகின்றன.

1981 ஜனவரி 28]

[முற்பகல் 10-10]

திரு. கே. எம். தங்கமணி கவுண்டர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த ஆலை உற்பத்தியைத் துவக்குகிற போது அதற்கான பணியாட்கள் எடுக்கின்ற நேரத்தில், அந்த ஆலை பின்தங்கிய இடத்தில் இருப்பதால், அந்த ஆலையைச் சுற்றி இருக்கிற பிற்பட்ட தாழ்த்தப்பட்ட மக்களுக்கு முன்னுரிமை கொடுத்து வேலை தரப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு எஸ். திருநாவுக்கரசு : பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக எந்தத் தொழிற்சாலை ஆரம்பித்தாலும் அந்தந்த மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தின் மூலம் தான் பணியாட்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். ஆகவே, அந்தப் பகுதியில் உள்ள கூட்டுறவு நூற்பாலைக்குத் தொழிலாளர்கள் எடுக்கிறபோது, அந்தப் பகுதியில் உள்ளவர்களுக்கு அதிகமாக முன்னுரிமை கொடுக்கப்படும்.

திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, தென்னாற்காடு மாவட்டத்தில் உள்ள கூட்டுறவு நூற்பாலையில் எத்தனைபேர் புதிதாக வேலைக்கு எடுக்கப் போகிறார்கள் என்று அறிய விரும்புகிறேன். என்னுடைய தொகுதியில் இருக்கிற நூற்பாலைக்கு ஆட்கள் எடுக்கிற போது 5 கிலோ மீட்டர் சுற்றளவில் உள்ள கிராம மக்களுக்கு மட்டும் தான் வேலை வாய்ப்பு அளிக்கப்படும் என்கிற உத்தரவாதத்தை அமைச்சர் அவர்கள் தருவார்களா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : எந்தக் கூட்டுறவு நூற்பாலை பற்றிக் கேட்கிறீர்கள்?

திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன் : செஞ்சித் தொகுதியில் உள்ள சாரம் கூட்டுறவு நூற்பாலை பற்றிக் கேட்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தனிக்கேள்வி போட்டால் அதற்கான விரிவான பதில் தரப்படும்.

மதுராந்தகத்தில் காகிதஆலை

வினா எண் 79— திரு. எஸ்.டி. உகம்சந்த் : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) செங்கற்பட்டு மாவட்டம் மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலையில் காகித ஆலை துவக்கும் திட்டம் எந்நிலையில் உள்ளது?

(ஆ) காகித ஆலை எப்பொழுது முதல் இயங்க ஆரம்பிக்கும்?